**மே - 17**

**"அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்கு தொண்டு செய்கிறவன் என்று நினைக்குங் காலம் வரும்". - யோவா 16 : 2**

முந்திய காலத்தில் இருந்ததைவிட தற்காலத்தில் துன்பப்படுதல் அதிக நாகரிகமானதாயிருக்கிறது. உண்மையுள்ளவர்கள் இன்று சொல்லர்த்தமுள்ள கற்களால் எறியப்படுகிறதில்லை அல்லது சொல்லர்த்தமுள்ள அம்புகளால் ஏய்யப்படுகிறதில்லை, அல்லது சொல்லர்த்தமாய் சிரச்சேதம் செய்யப்படுகிறதுமில்லை. ஆனால் துன்மார்க்கர் நீதிமான்கள் மேல் "கசப்பான வார்த்தைகளாகிய" அம்புகளை நாணேற்றுகிறார்கள் என்பது இன்னும் உண்மையாயிருக்கிறது. மேலும் அநேகர் உண்மையுள்ளவர்களாய் இருக்கிற காரணத்தால் நிந்திக்கப்பட்டு, அவதூறாகப் பேசப்பட்டு, ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்படுகிறார்கள். அதாவது "இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள்" அப்படிப்பட்டவர்கள் எல்லாரும் முதல் கிறிஸ்தவ உயிர்த்தியாகம் செய்த ஸ்தோவானைப் பின்பற்றுவார்களாக. அவனுடயத்தைப் போன்ற பிரகாசிக்கிற முகங்களுடனே தங்களுடைய சாட்சிகளை கொடுப்பார்களாக . தங்களுடைய நீதிபரராகவும், தங்களை விடுவிக்கிறவராகவும், மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசுவை தங்களுடைய விசுவாசத்தின் கண்களால் காண்பார்களாக. அவர்களுடைய வார்த்தைகள் ஸ்தோவானுடையதைப் போல, நிதானமுள்ளதாக இருப்பதாக. "கிருபையினாலும் வல்லமையினாலும் நிறைந்தவராய்" என்றும், "பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய்" என்றும் அவரைப்பற்றி எழுதியிருக்கிற பிரகாரமாக அவர்கள் விஷயத்திலும் உண்மையாயிருப்பதாக. **- Z '97, 57 (R 2108).**

எல்லா உண்மையுள்ளவர்களும் தேவனின் பேர் ஜனங்களின் கோபத்துக்குள்ளாகி, அதன் பலனாய் அவர்களுடைய ஐக்கியத்திலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய உண்மையுள்ள ஜனங்கள் தங்களுடைய வேலை, போதகங்கள், குணம், நம்பிக்கை ஆகிய இவைகள் சம்பந்தமாக தேவனுடைய ஏற்பாடுகளோடு இணக்கமாக இராதவர்களினால் தவறாக எண்ணப்பட்டு, அவர்கள் தேவனுடைய சத்துருக்களாகவும் அவருடைய ஏற்பாட்டின் சத்துருக்களாகவும், அவருடைய சபையின் சத்துருக்களாகவும் அவர்களால் மதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் பலனாய், பின் சொல்லப்பட்டவர்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாய் இருந்தவர்களை கொலை செய்வதினால் அவர்கள் தேவனுக்குத் தொண்டு செய்கிறதாக அடிக்கடி எண்ணியிருக்கிறார்கள். **- P '34, 62, 63.**

**ஒத்த வாக்கியங்கள்:-** யோவா 9:22,34; 12:42; 16:3; அப் 8:1; 9:1; யோவா 15:18-21; ரோம 10:2; 1கொரி 2:8; 1தீமோ 1:13; சங் 11:2; 38:20; 44:22; 56:5; 94:5; நீதி 29:10; மத் 5:10-12,44; 10:16-18, 21-23,28; 23:34; 24:8-10; மாற் 13:9-13; லூக் 6:22,23; 21:12-19; அப் 5:29,40-42; ரோம 8:17,35-37; 1கொரி 4:9-13 **கோபுர வாசிப்பு : Z '12, 323 (R 5116)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் துன்பப்படுத்தப்பட்டேனா? எப்படி? என்? அதன் பலன் என்ன?